† கந்தரன்-சம்பாதி வைசித்ராக்கங்கன் றம்பி.

கந்தராகரம்-மலை. *



கந்தராசனம்-சந்தம்.

† கந்தராபம்-ஓர்வகைமரம்.

கந்தருப்பன்-காமன்.

கந்தருவம்-இசை, இசைப்பாட்டு, எண்வகை மணத்துளொன்று; அஃது கன்னியுந் தலை மகனு மொருப்பட்டுக் கலப்பது, குதிரை, தேகம்விட்ட ஆத்துமா, தேவசாதியிலோர் வகை.

கந்தருவர்-தேவசாதியிலோர்வகையார்.

கந்தரை-குகை.

கந்தர்ப்பன்-மன்மதன்.

† கந்தர்வேசுரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட் டனு ளொன்று.

கந்தலம்-கிரணம், முளை.

கந்தலோகம்-சுப்பிரமணியபதம்.

கந்தல்-கெடுதல், கெட்டது, பீறல்.

கந்தவகம்-காற்று, மூக்கு, வாசனையுறல்.

கந்தவகன்-காற்று.

கந்தவடி-வாசனைத்தயிலம்.

† கந்தவதி-வாயுவுக்கு இராசதானி, வியாசர் தாயாகிய சத்தியவதி.

கந்தவருக்கம் - சுகந்தம், வாசனைத் திரவியங் கள்.

† கந்தவாகம்-வாயு.

கந்தவாகன்-காற்று.

† கந்தவாகை-மூக்கு.

கந்தவாரம் - அந்தப்புரம், அரசன்தேவி யில் லம்.

கந்தவாரணடக்கி-வாதமடக்கி.

† கந்தவிஷபாகம்-ஓர்வகைநோய்; அது சரீ ரத்திற் பிணநாற்றம் வீசல், சுரம், மயக் கம், சோம்பல், சர்வாங்க மூங் கணம், மூர் ச்சை, தலைவலி, சிலேட்டுமாதிக்கம், தாக ம், அதிகவார்த்தை, குளிர், வயிற்றிற் குத்

தல், கிரகணி யென்னு மிக்குணங்களை யுண்டாக்குவது.

† கந்தவிஷம்-சங்கோசகம், கரவீர முதலிய கிழங்குகள்.

† கந்தவுரு-அகக்கூத்திற் குரிய வுருவா யடிவரையறை யுடைத்தா யொரு தாளத்தாற் புணர்ப்பது.

† கந்தவெற்பு-தேவர்கள் குமாரக்கடவுளைப் பூசித்த மலை.

கந்தளம்-கதுப்பு, கவசம், தளிர், பொன், யுத்தம்.

கந்தறுவா-ஆமணக்கு.

கந்தற்பகூபம்-யோனி.

கந்தற்பசுவரம்-காமம்.

கந்தனேந்திரர்-ஓர்சித்தர்.

கந்தனை-சிற்றரத்தை.

கந்தன்-அருகன், ஓர்பிதிர், காமன், குமரன், சீர்ப்பந்தபாஷாணம், சூதபாஷாணம்.

கந்தாத்திரி-நெல்லி.

கந்தாயம்-பங்குவருஷத்தின் மூன்றத்தொரு கூறு, விளைவுகாலம்.

† கந்தாயு-துரியோதனன் றம்பியரு ளொருவன்.

கரந்தாரம்-காந்தாரம்.

கந்தி-கந்தகபாஷாணம், கந்தகம், கந்தியென்னேவல், கமுகு, தவப்பெண், வாசம்.

† கந்திதம்-அழுகை.

கந்தித்தம்-சீலை.

கந்தித்தல்-மணத்தல்.

கந்தியுப்பு-கந்தகவுப்பு.

கந்திரி-நாகூரில், துலுக்கருக்கு விசேஷத்த பண்டிகை, பண்டி.

† கந்திரேஸ்வரம்-சிவத்தலங்க ளாயிரத் தெட்டனு ளொன்று.

† கந்திலம்-ஓர்வகை முருங்கை, தூதுவளை.

கந்திவாருணி-பேய்த்தும்மட்டி.

கந்து - அருகு, கட்டுத்தறி, கந்தென்னேவல், கழுத்தடி, சந்து, தூண், தூற்றின மணியருகு, பண்டி, பண்டியுள்ளிரும்பு, பற்றுக்கோடு, பனங்கூடல், மாடு பிணைக்குங்கயிறு, யாக்கையின் மூட்டு, யானையணைதறி, வைக்கோற்றிரள்.

கந்துகட்டுதல் - நீர்முதலிய கொதித்துவரை கட்டல், வைக்கோற்றிரட்டி வளைத்து விடுதல்.

கந்துகம்-குதிரை, குருகிலமன்னர் குதிரை, பந்து.

கந்துகன்-தான்றி.

† கந்துகி-அந்தப்புரக் காவற்காரன்.

† கந்துகேசுவரம்-சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.

கந்துதல்-கெடுதல்.

கந்துமாறுதல் - இணைத்ததை மாற்றிவிடுதல்.

கந்துவான்-பிணைகயிறு.

கந்துளம்-பெருச்சாளி.

கந்துள்-கரி.


† கந்தேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.

கந்தேறு-கோடகசாலை.

கந்தை - கரணை, சீலை, நல்லாடை, பீறற்புடைவை.

கந்தோடம்-கருங்குவளை, வெண்குவளை.

கந்தோதம்-தாமரை. ✳



† கந்தோத்தமை-கள்.

† கந்தோலி-வெட்டுவெலியன்.

† கந்நன்-கிருட்டினன்.

† கபகலிஷ்டம்-ஓர்வகைநோய்; அது சிலேட்டுமதோஷ மிகைகளி லதிகமாகச் சேருங்காலத்திற் பிறந்து அவ்விடங்களில் வீக்கம்மல், ஒருவேளை மாத்தல், எரிச்சலென்னு மிக்குணங்களை யுண்டாக்குவது.

† கபசிராவம்-ஓர்வகைநோய்; அது நரம்புகளிற் சிலேட்டுமம் வியாபிக்கும்போது பிறந்து கண்களிலிருந்து வெண்மையாயும் பிசுபிசுத்த குழம்பாயும் லிங்காரமாயுஞ் சலத்தை யொழுகப் பண்ணுவது.

கபடஸ்தன்-கபடன்.

கபடநாடகசூத்திரன்-வஞ்சனைத் தொழிலன், விட்டுணு.

கபடநாடகம்-மகாதந்திரமான செய்கை, வஞ்சகநடிப்பு.

கபடநாடகன்-திருமால்.

கபடம்-தந்திரம், வஞ்சகம்.

கபடவித்தை-கபடநாடகம்.

கபடன்-வஞ்சகன்.

கபடாதி-புளிவசலை.

கபடி-கபடன்.

கபடு-கபடம்.

கபட்டுப்படிக்கல் - இடை குறைவான படிக்கல்.

† கபத்தலைவலி-ஓர்வகைச் சிரநோய்; அது சிரோபாரம், குத்தல், சரீர முழுதுங் கடுத்தல், மூர்ச்சை, அரோசகம், வாந்தி, கண்

களுப்பலோடு நோதல், காதுக்குள் நமைச்சலாகிய இக் குணங்களை யுண்டாக்குவது.

† கபஸ்தி-சூரியகிரணம்.

† கபஸ்தீசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.

கபநாசம்-கண்டங்கத்திரி.

கபநாசனி-தேற்றான்வித்து.

கபந்தம்-உடற்குறை, கவந்தம், நீர்.

† கபந்தீசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.

கபம்-கோழை, சிலேட்டுமம்.

கபம்பம்-வாலுழுவை.

† கபரி-பெருங்காயமரம்.

கபர்த்தம்-சிவன்சடை.

கபவிரோதி-சிற்றரத்தை.

கபாடக்கட்டி-வசம்பு.

கபாடபுரம்-இடைச்சங்கமிருந்தவூர்.

கபாடம்-கதவு, காவல்.

கபாய்-நிலையங்கி.

† கபாலகுஷ்டம்-ஓர்வகைக் குஷ்ட வியாதி; அது இரணக்கொப்பளங்கள் சிறிது சிறிதாகக் கபாலத்தினது காந்தியைப் பெற்றுந் தடித்துங் கறுத்துஞ் சிவந்துஞ் சுரசுரத்து முகங்கள் வாடியு மொன்றை யொன்று சுற்றி அநேக கொப்பளங்க ளெழும்பி இரணங்களாவது. அவைகளிற் பெரிய பெரிய குழிகள் விழுவதுஞ் சீத்தண்ணீ ரொழுகுவதும் உரோமங்கள் முளைப்பதும் நோவுந்தினவு மதிகப்படுவதுமான குணங்க ளுண்டாகும். கபாலம்போல் வெளுத்த நிறத்தைப் பெற்றிருப்பதா லிப்பெயர் பெற்றது.

கபாலக்காரன்-ஓர்நோய்.

கபாலக்குத்து-தலைமண்டைக்குத்து.

கபாலசன்னி-ஓர்சன்னி.

கபாலசாத்தி-ஆவிரை.

கபாலதரன்-சிவன், வயிரவன்.

கபாலபாணி-சிவன்.

† கபாலபித்தம்-ஓர்வகைப் பித்தநோய்.

கபாலமலை-ஓர்மலை.

† கபாலமோசனம் - ஒரு புண்ணிய க்ஷேத்திரம்; இராமராற் கொலையுண்ட மகோதரனது கபால என்புத்துண்ட மொரு இருடி காலிற் றைக்க அவ்வேதனையா லவ்விருடி கங்கிலன் தபஞ் செய்தவிடத்திற்குப் போனார். அஃதங்கே வீழ்ந்தமையா லவ்விடங் கபாலமோசன மென்னப்பட்டது.

† கபாலமோசனேசுவரம்-சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.

கபாலம்-இரப்போர்கலம், தலையோடு.

† கபாலரோகம்-ஓர்வகை நோய்.

கபாலவாசல்-உச்சித்துவாரம்.

கபாலன்-சிவன், சர்பந்தபாஷாணம்.

கபாலி-உமை, சிவன், வயிரவன்.

கபாலினி-துர்க்கை.

† கபாலீசர்-திருமயிலை பூம்பாவையிற் கோயில் கொண்டிருக்குஞ் சுவாமி.

கபாலீச்சுரன்-சிவன்.

† கபாலேசுவரம்-சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.

கபி-கயிறிழுக்குங்கருவி, குரங்கு.

கபிகந்துகம்-தலையெலும்பு.

† கபிசம்-ஓர்வகை யன்னம்.

கபிஞ்சலம்-ஆந்தை, காடை, சாதகப்புள்.

† கபிஞ்சலேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.

கபிஞ்சலை-ஓர்நதி.

கபிதம்-கருஞ்சீரகம்.



கபித்தம்-கொட்டிக்கிழங்கு, விளாமரம்.

கபித்துவசன்-அருச்சுநன்.

கபிரதன்-ஸ்ரீராமன். ※

† கபிலபுரம்-கலிங்கநாட்டிலுள்ள வொரு தேசம்.

கபிலம்-உபபுராணம் பதினெட்டி லொன்று, கருமைகலந்த பொன்மை.

† கபிலவெலி-ஓர்வகை எலி; அது கபில நிறமுள்ளது, கடித்தா லவ்விடத்திற் பல கட்டிக ளுண்டாய் விரணமாகும். அதனாற் சுரம், வாந்தி, பிரமையாகிய குணங்களுண்டாகும்.

கபிலன் - ஓர்முநிவன், திருவள்ளுவர் சகோதரன்.

† கபிலாசிலந்தி - ஓர்வகைச் சிலந்தி; அது கண்களினாற் பார்க்கில் தேகமுற்றுஞ் சிவந்த தடிப்பும், வாய்நீரூறலும், மயிர்க்கால்களி லெரிச்சலும், தலைப்பாரமு முண்டாகும்.

† கபிலாசிரமம் - கங்காசங்கம சமுத்திரப் பிரதேசத்திலுள்ள சகரத்தீவிலுள்ளது, பாதலத்தி லுள்ளதென்றுஞ் சொல்லுவர்.

† கபிலாசுவன்-குவலயாசுவன் மகன், துந்துமாரன் மகனாகிய திருடாசுவன்.

கபிலை-கருமைகலந்தபொன்மை, காராம்பசு, தென் கீழ்த்திசை யானைக்குப் பெண்யானை, தேவபசு, பசு, நீரிறைக்குஞ் சூத்திரத்தொன்று.

† கபீடம்-நீர்.

கபீதனம்-வாகை.

† கபீரம்-ஆழம்.

† கபுரம்-கழுகு.

† கபோணி-முழங்கை.

கபோதகம்-சித்திரக்கம்பி.

† கபோதபாலிகை-மெத்தையினது கொடுங்கையிற் பட்சிகளிருக்குந் துவாரம்.

கபோதம்-கரும்புறு, சுவர்த்தலங்களின் சித்திரக்கம்பி, புறு.

† கபோதலோமன்-விலோமன் மகன்.

கபோதி-குருடன்.

† கபோதேஸ்வரம்-சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.

கபோலம்-கதுப்பு.

† கபோலேஸ்வரம்-சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.

கப்பச்சு-கம்மாளர்கருவியினொன்று.

கப்படம்-சீலை.

கப்படா-அரை.

கப்படி-ஓர்மரம்.

கப்பணம்-இருப்பு நெருஞ்சின்முள், ஓராபரணம், கழுத்திடுமிரும்புத்தகடு, கைவேல்.

கப்பம்-அரசிறை.

கப்பரை-இரப்போர்கலன், கிடாரம்.

கப்பலோட்டு-கடல்யாத்திரை.

கப்பல்-மரக்கலம்.

கப்பல்வாணம்-ஓர்வாணம்.

கப்பல்வாழை-ஓர்வாழை.

கப்பறை-குதிரைஞர்தாயம்.

கப்பற்கடலை-ஓர்கடலை.

கப்பற்கதலி-ஓர்வாழை.

கப்பற்காரன்-கப்பற்றலைவன்.

கப்பற்சண்டை - கப்பலி விருந்து செய்யும் போர்.

கப்பற்பாட்டு-ஏலப்பாட்டு, ஓர்பாடல்.

கப்பி - ஓர்கருவி, கயிறிழுக்குங்கருவி, கழிகடை, குறுணல், தானியம், தெள்ளி நீக்கியது.

கப்பித்தல்-கிளைவிடல், முகையரும்பல்.

கப்பிப்பிஞ்சு-கழிகடைப்பிஞ்சு.

கப்பியல்-கப்பி.

கப்பு-கவர்கொம்பு, கிளை, சிறுதாண், மயிர்க்கூட்டுஞ்சாயம்.

கப்புக்கால்-குறுங்கால்.

கப்புச்சாயம்-ஓர்வகைச்சாயம்.

கப்புதல் - உண்ணல், கம்முதல், மூடிக்கொள்ளல்.

கப்புத்தோள்-வலத்தோளுமிடத்தோளுமாகக் காவுதல்.

கப்புநாமம்-இருகவர்நாமம்.

கப்புவிடுதல்-கவர்வைத்தல், கிளைவிடுதல்.

கமகமத்தல்-மிகமணத்தல்.

கமகமெனல்-வாசனைக்குறிப்பு.

கமகன்-அரும்பொருளைச் செம்பொருளுடையாய்க்காட்டிப்பாடுவோன்.

கமக்காரன்-கமத்தலெசமான், வேளாளன்.

கமங்கட்டுதல் - கமமுண்டுபண்ணல், வேளாண்மைக்கணிகோலுதல்.

கமசுகட்டுதல்-முயன்முயிற்றல்.

கமடத்தரு-சீவதாரு.

கமடம்-ஆமை.

† கமடி-பெண்ணாமை.

† கமடேசுவரம்-சிவத்தலங்களாயிரத்தெட்டனு ளொன்று.

கமண்டலம்-கெண்டிகை, சுரைக்குடுக்கை; இஃது தவத்தோர் பஞ்சமுத்திரையினொன்று.

கமத்தொழில்-உழவுதொழில்.

கமநம்-நடை.

கமபாஷை-ஓர்பயில்.

கமம்-நிறைவு, விளைநிலம்.

கமரதம்-மணித்தக்காளி.

கமரி-ஓர்புல்.

கமருதல்-அழுதல்.

கமர்-வெடிப்பு.

கமலகுண்டலமாய்விழுதல்-கீழ்மேலாய்விழுதல், தலைகீழாய்விழல்.

கமலக்கண்ணன்-விஷ்ணு.

கமலநிருத்தம்-கூத்திலோர்விகற்பம்.

கமலநிறமணி-சாதுரங்கப் பதுமராகம்.

† கமலபவன்-பிரமா.

† கமலபாலிகை-இடிம்பை.

கமலம்-ஓர்வகைத்தட்டு, தாமரை, நீர், வைத்தரிப்பு.

கமலயோனி-பிரமன்.

கமலராகம்-பதுமராகம்.

† கமலவல்லித்தாயார் - திருப்பேர் நகரிற் கோயில்கொண்ட இலக்குமி.

கமலஊர்தி-அருகன், பிரமன்.

கமலாகாரம்-தாமரைவடிவம்.

† கமலாக்ஷன் - தாரகாசுரன் புத்திரன், தாரகாக்ஷன், வித்தியுன்மாலி.

கமலாக்கினி-மட்டானதீ; அது இரண்டுவிரற் கனமுள்ள இரண்டுவிறகால் எரிப்பது.

கமலாசனன்-அருகன், பிரமா.

கமலாசனி } இலக்குமி.
கமலாசனை }

கமலாலயம்-திருவாரூர்.

கமலாலயை-இலக்குமி, திருவாரூர்.

கமலி-குங்குமபாஷாணம்.

கமலிப்பட்டு-ஓர்பட்டு.

கமலினி-உமைசேடிகளிலொருத்தி.

கமலை-இலக்குமி, திருவாரூர்.

† கமலோத்தமம்-குசும்பாவன்னம்.

கமல்-குடசப்பாலை, வெட்பாலை.

கமவாரம்-அணிப்பங்கு.

கமவேலை-உழவுத்தொழில்.

கமழ்தல்-மணத்தல்.

† கமனேசுவரம்-சிவத்தலங்களாயிரத் தெட்டனுளொன்று.

கமறல் } அலறுதல், அழுதல், குமிறுதல், மிக்காய்தல்.
கமறுதல் }

கமனகுளிகை-இரசகுளிகை, [illegible] தூக்குப்போகப் பண்ணும் மருந்து.

கமனசித்தி-கமனம்பண்ணும் வல்லமை.

கமனப்பிரியை-ஐம்பத்து மூன்றாவது மேளகர்த்தா.

கமனம்-கதி, போதல்.

கமனம்பண்ணுதல் - கமனமாய்ச் செல்லல், பெண்ணிடத்திற்சேர்தல், போதல்.

கமனி-ஆகாயமார்க்கமாய்ச் செல்பவன்.

கமனித்தல்-கமனம்பண்ணல், போதல்.

கமாஸ்-ஓரிராகம்.

கமாரிடுதல்-சத்தம்பண்ணல், வெடித்தல்.

கமாரெனல்-சத்தம்பண்ணுதல்.

கமார்-வெடிப்பு.

கமி-மிளகு.

† கமிகை-கடிவாளம்.

கமிச்சு-கம்பியச்சு.

கமித்தல்-க்ஷமித்தல், பொறுத்தல்.

கமிப்பு-க்ஷமிப்பு, பொறுமை.

கமுகந்தீவு-சத்ததீவிலொன்று.

கமுகமுத்து-கமுகுமுத்தம்.

கமுகம்பூச்சம்பா-ஓர்நெல்.

கமுகு-பாக்குமரம்.

கமுகுமுத்தம் - கமுகிற்பிறந்த பச்சை நிறமுத்து.

கமுக்கட்டு-அக்குள், கைக்குழி.

கமுக்கம்-அடக்கம், அமைந்திருத்தல்.

கமுக்குக்கமுக்கெனல் - ஈரடுக்கொலிக் குறிப்பு.

கமை-க்ஷமை, பொறுமை; அஃது சத்த புண்ணியத்தொன்று.

கம் - அறிவு, ஆகாயம், ஆட்டுக்கடா, இந்திரியம், கம்மியர்தொழில், காற்று, சந்தோஷம், செயல், தலை, நீர், பிரமன், முத்தி, மேகம், விந்து, வெண்மை.

† கம்சன்-உக்கிரசேனன் மகன், மதுராபுரத்தரசன், கிருஷ்ணன் மாதுலன்; இவன் பூருவஜென்மத்திற் காலநேமியென்னு மிராக்ஷசன், அந்த வாசனையால் தேவர்களைத் துன்பப்படுத்திவந்தான். தனது தங்கையான தேவகியை வசுதேவனுக்கு விவாகம் பண்ணிக் கொடுத்து இரதத்தி லேற்றிக் கொண்டு வனம் பார்க்கப் போகையில் "உன் தங்கை புத்திரனாற் கொல்லப்படுவாய்" என்றோ ரசரீரி பிறந்தது. அது கேட்டவுடன் திரும்பிவந்து இருவரையுஞ் சிறைச்சாலையில் விட்டுப் பிள்ளைகள் பிறக்குந்தோறுங் கொன்றுவந்தான். முடிவிற் கிருஷ்ணன் பிறந்து தனது யோகமாயையால் நந்தன் சேரிபோய்ச் சேர்ந்தான். அஃதறிந்து கம்சன் அவனைக்கொல்லப் பல உபாயங்கள் தேடியும் பலியாது ஈற்றிற் கிருஷ்ணனாற் கொல்லப்பட்டான். உக்கிரசேனன் மனைவி தோழிகளோடு காட்டிற் சென்றபோது அங்கே தோழிகளைப் பிரிந்து வழி தடுமாறித் தனிக்க அச்சமயமோ ரரக்கன் கண்டு மோகித்து அவளைக் கூடிப் பெற்ற புத்திரன் இக்கம்சன்.

† கம்சாராதி-கிருட்டிணன்.

† கம்சை-உக்கிரசேனனது மூத்தமகள்.

கம்பக்கனை - அசையாதவன், அசையாத்தம்பம், தழுக்குணி.

கம்பக்கூத்து-தொம்பர்கூத்து.

கம்பங்கோரை-ஓர்புல்.

† கம்பச்சுரம்-ஓர்வகைச் சுரநோய்; அது நடுக்கம், சர்வாங்கசீதளம், வியர்வை, கொட்

டாவி, தலைப்பாரம், அருசி, கண்ணிற் சலப்பெருக்கம், தாகம், சோர்வு, தலைப்புரட்டு, சுவாசம், அதிக வேதனை, துர்ப்பலம், கூச்சம், வாயிலும் நாவிலுங் கொப்பளம், நித்திராபங்கம், பேதி, எப்பம், புளித்தவாந்தி, சடத்துவம், கைகளில் நோவு, நாடி சூட்சமமாகவும் வேகமாகவும் நடக்கை யாகிய இக்குணங்களை யுண்டாக்குவது.

கம்பட்டக்காரன்-காசடிப்போன்.

கம்பட்டசாலை - காசுமுதலியன அடிக்குஞ் சாலை.

கம்பட்டமடித்தல்-காசடித்தல்.

கம்பட்டமுளை-காசடிக்கும்முத்திரை.

கம்பட்டம்-காசு.

கம்பத்தம்-வேளாண்மை.

கம்பத்தன்-இராவணன்.

கம்பத்து-தோணியின்வெடிப்பு.

கம்பநன்-சலநசுபாவமுள்ளவன்.

கம்பந்தாளி-ஓர்தாளி.

கம்பந்திராய்-ஓர்திராய்.

† கம்பபம்-கம்பளம்.

† கம்பபிவாகியம்-பார வண்டி.

கம்பம்-அசைவு, கற்பரிபாஷாணம், சாலாங்கபாஷாணம், தாலம்பப் பாஷாணம், தூண், நடுக்கம், பாய்மரம், விளக்குத்தண்டு, வெள்ளைப்பாஷாணம்.

கம்பரம்-சஞ்சலம்.

கம்பர்காஞ்சி-ஓரூர்.

கம்பலம்-கம்பளி, செவ்வாடை, மேற்கட்டி.

கம்பலை - அச்சம், ஒலி, சண்டை, துன்பம், நடுக்கம், மருதநிலம், வயல், வருத்தம்.

கம்பலைகட்டுதல் } சண்டைபிடித்தல், பேச்சு
கம்பலைப்படல் } வார்த்தைப்படல்.

கம்பலைமாரி-ஓர்பெண்தேவதை, கம்பலைப்படுகிறவன்.

கம்பவம்-சீலைப்பேன்.

கம்பவாணம்-ஓர்வாணம்.

கம்பவாதம்-உதறுவாதம், நடுக்குவாதம்.

கம்பளத்தார்-ஓர்சாதியார்.

† கம்பளபருகிஷன்-அந்தகன் மகன்.

கம்பளம்-ஓர்நாடு, கம்பளி, செம்மறிக்கடா, செவ்வாடை, துருவாட்டேறு.

கம்பளர்-மருதநிலமாக்கள்.

கம்பளி - ஓர்மரம், ஓர்வகைச்சீலை, ஓர்வகை யாடு.

கம்பளிக்கொண்டான்-ஓர்மரம்.

கம்பற்று-தோணியிற்சில்லி.

கம்பனம்-அசைவு, அதிர்த்தல்.

கம்பன்-ஓரிராக்கதன், ஓர்புலவன்.

கம்பாகம்-அமாற்கயிறு.

கம்பாநதி-காஞ்சீவரத்துக் கருகிலுள்ள கம்பையாறு.

கம்பாயம்-ஓர்புடவை.

† கம்பாரி-குமிழஞ்செடி.

கம்பானம் } அமாற்கயிறு.
கம்பான் }

கம்பி-இரும்புமுதலிய வற்றின் கம்பி, கம்பியென்னேவல், காசு, காதணி, சித்திரக் கம்பி, வெடியுப்பு.

கம்பிகட்டுதல்-புடைவைமுதலியவற்றிற்குக்கம்பிகீறுதல்.

கம்பிகை-ஓர்வாத்தியம்.

கம்பிக்கடுக்கன்-ஓர்வகைக்கடுக்கன்.

கம்பிக்கரை-கம்பிக்குறியுள்ளபுடைவை.

கம்பிக்குறி-கம்பிபோன்றகுறி.

கம்பிதம்-அசைவு, நடுக்கம்.

கம்பித்தல்-அசைதல், நடுங்கல்.

கம்பிமணி-ஓர்வகைமணி. [கம்பி.

கம்பியச்சு - கம்மாளரோர்கருவி, சித்திரக்

கம்பியுப்பு-ஒருப்பு.

† கம்பிரம்-அசையுந்தன்மையுடைய அரசிலை முதலியன.

கம்பிவாங்கல் } நெடுகிவிடுதல்.
கம்பிவாங்குதல் }

கம்பிவிறிசு-ஓர்வாணம்.

கம்பிளி-கம்பளி.

கம்பீரசன்னி-ஓர்நோய்.

கம்பீரம்-ஆர்ப்பரிப்பு, ஆழம், செருக்கு.

† கம்பீரரோகம்-ஓர்வகை நோய்; அது இலிங்கநாச நோய்களி னின்று மதிகரித்த வாயுவின் விருத்தியாற் கண்களின் நரம்புகள் முடங்கிப் பார்வைக்கு ஞருவியாழ்ந்துவிடும்போது பிறந்து கொஞ்சமேனும் பார்வையைத் தெரிய வொட்டாதபடி செய்வது.

† கம்பீரவாதசோணிதம் - ஓர்வகை நோய்; அது மாமிசத்தையுஞ் சருமத்தையும் பற்றிய நமைச்சல் முதலிய துர்க்குணங்கள் சில நாள் பொறுத்துள்ளிலாழப் பாய்ந்து சத்ததாதுக்களிலும் வியாபித்து மிக்க வைத்திரவத்தை யுண்டாக்குவது. இது முற்றிலுடம்பில் முழுவதும் வீக்கங் காணும்.

† கம்பீரவாதம் - ஓர்வகை வாதநோய்; அது வாயுவை யுண்டாக்கும் வஸ்துக்களினூற் பிறந்து முதல் முதல் ஊர்த்து வாங்கத்திலாவது அதோங்கத்திலாவது சர்வாங்கத்திலாவது இருக்கின்ற தாதுவைப் பற்றி யொவ்வொரு தாதுக்களாகத் தாண்டிக் கொண்டே யுள்ளிலாழ்ந்து அஸ்திரத் தாதுக்குள்ளிருக்கு மச்சதாதுவை யனுசரித்துத் துன்பத்தைச் செய்வது. அப்போது சரீரமுழுவதும் வேதனை, திமிர், கைகால் முடக்கம், வாந்தி, மூர்ச்சை யென்னு மிக்குணங்க ளுண்டாகும்.
† கம்பீரவிக்கல்-ஓர்வகை விக்கல்நோய்; அது பக்குவாசயத்தானத்திலாவது நாபி ஸ்தானத்திலாவது பிறந்து மகாவிக்கல் ரோகக்குணங்களைப் பெற்று அடிக்கடி கொட்டாவி, தேகமுறுக்கு, அதிக சத்தத்தோடு நீண்டுவருகின்ற விக்கலாகிய குணங்களை யுண்டாக்குவது.
கம்பீரன்-வீரகெற்சிதமுள்ளவன்.
கம்பீரித்தல் - ஆர்ப்பரித்தல், வீராவேசப்படுதல்.
கம்பீர்-கத்தைக்காம்புபோன்ற ஓர் சரக்கு.
கம்பு - ஓர்பயிர், சங்கு, சிறுதடி, செந்தினை, மரக்கொம்பு.
கம்புக்கிரீவம்-மூன்றிரேகைகளுள்ளகழுத்து.
கம்புள்-சங்கு, சம்பங்கோழி, வானம்பாடி.
கம்பை-எல்லை, கதவு முதலியவற்றின்கம்பை, காஞ்சீவரத்துக் கருகிலுள்ள ஓர் யாறு, பொறுப்பு.
கம்பைக்கல்-ஓர்மணி.
கம்போசம்-ஓர்வகைச்சங்கு, ஓர்தேசம்.
கம்போத்தம்-குவளை.
கம்மக்கை-வேலைநெருக்கம்.
கம்மஞ்செய்மாக்கள்-கைத்தொழிலாளர்.
கம்மம்-கம்மியம், வேலை.
கம்மல்-இருமல், ஓர்வகைக்கடுக்கன், காதோலை, குரலடைப்பு, மங்கல், மந்தாரம், மாசு.
கம்மவார்-ஓர்சாதியார், கமக்காரர்.
கம்மாலை-கம்மத்தொழில்செய்யுந்தலம்.
கம்மாளர்-கம்மியர்; அவர்கள்-கன்னர், கொல்லர், சிற்பர், தச்சர், தட்டார்.
கம்மாறர்-கரையார்.
கம்மிடுதல்-வாசனைக்குறிப்பு.
† கம்மியமானக்கிரியை - குறிப்புவினை.
† கம்மியமானம்-குறிப்பு.
கம்மியம்-கைத்தொழில், பேறு.
கம்மியர்-கம்மாளர், தொழில்செய்வோர்.
கம்முதல்-அதட்டியுரப்பல், இருமுதல், குரல்குன்றல், மூடுதல்.
கம்மெனல்-வாசனைக்குறிப்பு.
கம்மை-சிறுகீரை.
கயக்கம்-கயங்கப்படுதல்.
கயக்கல்-நசுக்கல், முறுக்கல், மெலித்தல், † கலக்கல்.
கயக்கு-கசக்கென்னேவல், கைக்குதல், சோர்வு.
கயக்குதல் - நசுக்குதல், முறுக்குதல், மெலிவித்தல்.
கயங்கல் - குழைதல், சோர்தல், மெலிதல், விலகிவிடல்.
கயங்கு-கம்பு, கயங்கென்னேவல்.
கயங்குதல்-குழைவு, சோர்தல், நொந்துமெலிதல், விலகிவிடுதல்.
கயடேரிகம்-அகில்.
கயத்தம்-துளசி.
கயத்தி-கெட்டவள்.
கயந்தலை-மனத்துயர், யானைக்கன்று, வாவி.
கயப்பிணை-வங்கமணல்.
கயமதம்-யானைமதம்.
கயமலர்-பெரியமலர்.
கயமுகம்-கயாசுரன்.
கயமுகன்-ஓரசுரன், விநாயகன்.
கயமுகாரி-விநாயகன்.
கயமுனி-யானைக்கன்று.
கயமை-கீழ்மை, சண்டாளத்தனம்.
கயம் - அகழி, அழிவு, ஆழம், இளமை, ஓர்நோய், கீழ்மை, குளம், கேடு, தேய்வு, நீர், பெருமை, மேன்மை, யானை, கருமை.
கயரோகம்-க்ஷயரோகம்.
கயர்-கசர், கயரென்னேவல், துவர்ப்பு.
கயல்-கெண்டைமீன்.
கயவஞ்சி-உலோபன்.
கயவஞ்சித்தனம்-உலோபத்தனம்.
கயவர்-கீழ்மக்கள்.
† கயவாகு - சிலப்பதிகாரத்திற் கூறப்பட்ட இலங்கையரசன்; இவனே முதல் முதல் கண்ணகிக்கு இலங்கையிற்கோவில் கட்டுவித்து உற்சவங்கொண்டாடியவன்.
கயவாய்-கரிக்குருவி, கழிமுகம், பிளந்தவாய்.
கயவாளகம்-கீழுலகம்.
கயவு-உபரம், கழிமுகம், களவு, பெருமை, மிகுதி, மேன்மை.

† கயர்கூடு-இளைக்கயல்.

கயனை-கசனை.

† கயன்-உன்முகன்புத்திரன், அங்கதன்தம்பி, ஓர் சக்கரவர்த்தி; இவன் பிரியவிரதன் வம்சத்து நக்தனுடைய மகனும் [illegible] மேதயாகஞ் செய்து இந்திரபதம் பெற்றவனுமானவன், அமூர்த்தராஜன் மகன்; இவன் யக்ஞியங்கள் பலசெய்து இராஜவிருஷியானவன். இவன் யக்ஞியங்கள் செய்தவிடமே கயையெனப் பெயர் பெற்றது.

கயாகரம்-ஓர் நிகண்டு.

கயாரி-சிங்கம்.

கயானனன்-கஜமுகாசுரன், விநாயகன்.

கயிக்கரன்-ஏவல்செய்வோன்.

கயிங்கரியம்-வேலை.

கயிசிதம்-ஆகாயத்திற்கருமேகம்.

கயிப்பு-இலாகிரி.

கயிமவாதி-வசம்பு.

கயிரம்-அலரி.

கயிரவம்-செவ்வாம்பல், வெள்ளாம்பல்.

கயிரிகம்-ஓர்மண், காவிக்கல்.

கயிறை-சுற்றம்.

கயிர்-[illegible].

† கயிலாசநாயகியம்மை-திருக்காளத்தியிலே கோயில் கொண்டிருக்குந் தேவியார்.

கயிலாசபருவதம்-வெள்ளிமலை.

கயிலாசம் }
கயிலாயம் } ஓர்மலை, சிவபதவி.

கயிலாயன்-சிவன்.

கயிலி-பலவண்ணமாயிருப்புடைவை.

கயிலை-கயிலாசம்.

கயிலைமலை-வெள்ளிமலை.

கயிலையாளி-சிவன்.

கயிலைவிற்கவிங்காளி-[illegible].

கயில்-ஆபரணக்கடைப்பூட்டு, பிடர்ப்பாதி, பிடரி.

கயிறடித்தல்-தாம்புபோடுதல்.

கயிறு-வடம்.

கயிறுகட்டுதல்-கைகவித்தல்.

கயிறுசாத்துதல்-சாத்திரப்பார்க்க ஏட்டிலே கயிறிடுதல்.

கயிறுதடி-[illegible].

கயிறுபிடித்தல்-தாம்பிடித்து [illegible].

கயிறுமாலைப்பிடித்தல்-தொடர்ந்து [illegible], வருத்தப்படுத்தல்.

[illegible]

கரடகன்-ஓர்வஞ்சகமுள்ள நரி, தந்திரி, வஞ்சகன்.

கரடம் - காக்கை, மதம்பாய் சுவடு, யானைமதம்.

கரடி-ஒவாய்மிருகம், சிலம்பம்.

கரடிகை-ஓர்பறை.

† கரடிப்பறை-தட்டை.

கரடிப்புண்-அதமப்புணர்ச்சியினாற் பீசத்தினுண்டாகும் ஓர்வித விரணம்.

கரடிவித்தை-ஆயுதபரிட்சை.

கரடு-ஓர்புல், கறு, காற்பரடு, சருச்சரை, முரடு, வஞ்சகம்.

கரடுமுரடு - செம்மையற்றது, வயிரமுங்கணுவுங்கொண்டது.

கரட்டரிதாரம்-ஓர்மருந்து.

கரட்டான்-ஓரோணான்.

கரட்டுக்கோட்டெனல்-ஒலிக்குறிப்பு.

கரட்டுத்தாளகம்-விளைவுபாஷாண முப்பத்திரண்டிலொன்று.

கரட்டுநிலம்-வன்றரை.

கரட்டோணன்-ஓரோந்தி.

† கரணக்கூத்து-படிந்தவாடல்.

† கரணாசன்-நீண்டசத்திருக்கு மூக்கன்.

கரணத்திராணம்-மஸ்தகம்.

கரணம்-அந்தரிந்தியம், அறுதிச்சீட்டு, உபகரணம், எண்ணிக்கை, ஏது, ஐம்பொறி, கணிதம், கலவி, காரணம், கூத்திலோர் விகற்பம், கூத்து, செய்கை, [illegible], பஞ்சாங்கத்திலொன்று, விருப்பம்.

கரணவணி-பிரகரணம்.

† கரணவேறிதகாரம் - [illegible]ட்டனொன்று.

கரணி-[illegible], செய்தல், செய்பவன்.

கரணிதம்-அந்தக்கரணம்; அஃது ஆங்காரம்-சித்தம்-புத்தி-மனம்-கலவி-கூட்டம்-கூத்தின் விகற்பம்.

கரணியமேணிக்கல்-கரும்புள்ளிக்கல்.

கரணியாசம்-[illegible].

கரணீயம்-காரியம், செய்யத்தக்கது.

கரணை - ஓர்செடி, ஓர்தூறு, ஓர்வகைக்கட்டி, கொல்லை, முளி, மீனைத்துண்டு.

கரணைப்பலா-[illegible].

கரணைப்பாவட்டை-ஓர்பாவட்டை.

கரண்டகம்-ஓர்செப்பு.

கரண்டம்-கமண்டலம், கரண்டகம், சீக்காக்கை.

கரண்டி-சிற்றகப்பை.

கரண்டை-முநிவர்வாசம்.

† கரதம்-காக்கை.

கரதலம்-கைத்தலம்.

கரதாலம்-ஓர்வாத்தியம்.

கரதாளம்-பனை.

† கரதோயம் - வங்கதேயத்திலுள்ள வோர் நதி; இது கௌரிவிவாககாலத்திற் சிவன் கரங்களினின்று பெருகினமையாற் கரதோயமெனப் பெயர் பெற்றது.

கரதோயை-ஓர்நதி.

கரத்தல்-ஒளித்தல், கொடாமை, திருடல், மறைத்தல்.

† கரந்தமன்-யயாதிபுத்திரனாகிய துர்வாசன் பௌத்திரன் புத்திரன்; இவன்பலாசுவன் எனவும் படுவான்; இவன் பல பராக்கிரமமுடையனா யரசுசெய்தபோது பொறுமையால் ஏனையவரசர்கள் திரண்டு இவனை வளைய அதுகண்டு அஞ்சிச் சிறிதுநேரம் ஏகாந்தமாயிருந்து சிந்தித்துப் பின் வெளியேசென்று யாவரையுஞ் செயித்தவன். இவன் மகன் அவீக்ஷித்து.

† கரந்துவாரவெழுநி-மேற்கட்டுத்திரையாகவும் செயற்பாட்டடனை வகுக்கப்படுவது.

† கரந்துவரவெழுநியிலக்கணம் - கரந்துவர வெழுநியினது இலட்சணம்; அது ஒரு முகவெழினி பொருமுக வெழினியினுஞ் சிறப்புடைத்தாய் அந்தணர், அரசர், வணிகர், சூத்திரரென்று சொல்லப்பட்ட வச்சிரதேகன், வச்சிரதந்தன், வருணன், இரத்தகேசரனென்று நால்வகைவருணப் பூதர்களையுஞ் சித்திரத்தா லமைக்கப்பட்டு அரங்கிற்றூங்க விடுவது.

கரந்துறைகோள்-காருக்கிரகம்

கரந்துறைச்செய்யுள்-மிறைக்கவியிலொன்று.

கரந்தை - ஓர்பூடு; அஃது அட்டாதசமூலத்தொன்று, கல்லாரை, பகைவரோட்டின நிரைமீட்டவர்க்குமாலை.

† கரந்தையரவம் - கரந்தைத் திணைத்துறை பதின்மூன்றனுளொன்று; அது பசுநிரையைக் கைப்பற்றினமை கேட்டுச் செய்யாநின்ற காரியந்தவிரக் கடிதினாகித் திரளுங் கூறுபாட்டைச் சொல்லுவது.

கரபத்திரம்-ஈர்வாள், கைவாள்.

கரபத்திரிகை-சலக்கிரீடை.

கரபம்-கழுதை.

கரபரிசம்-கையினாற்றொடுகை.
கரபர்ணம்-செவ்வாமணக்கு.
கரபல்லவம்-கைவிரல்.
கரபவல்லபம்-விளாமரம்.
கரபாத்திரமெடுத்தல் } கையிலன்னம் வாங்கிப் புசித்துத் திரிதல்.
கரபாத்திரம் }
கரபாலம்-முப்பது அங்குலத்துக்கு மேற்பட்டகத்தி.
கரபி-யானை.
கரபீரம்-சிங்கம். *



கரபூடணம் } கங்கணம்.
† கரபூஷணம் }
கரப்பன்-கரப்பான், கிரந்திப்புண்.
கரப்பன்பூச்சி-ஓர்பூச்சி.
கரப்பன்பூடு-ஓர்பூடு.
கரப்பான்-ஓர்புண்.
† கரப்பான்பித்தம் - ஓர்வகைப்பித்தநோய்; அது சர்வாங்கத்திலுஞ் சொறி, உபத்திரவத்தோடு கட்டி, குழம்பானபேதி, இரைச்சலுடன் பொருமல், இசிவு, கால்களில் விலவிலப்பு, இடுப்புநோவு, திமிரோடு சரீரத்திற் காந்தல், நிறைக்குறைவென்னுமிக்குணங்களை யுண்டாக்குவது.
† கரப்பான்பிரமேகம் - ஓர்வகைப் பிரமேகநோய்; அது வயிற்றிலுளைச்சல், சீதளம் வீழல், நீர் உஷ்ணமாகவுங், கடுப்பாகவு மிறங்கல், சிலவேளை யத்துவாரத்தைப் புண்ணாக்கிச் சுண்ணாம்புக் கல்லைக் கரைத்த சலம்போற் குத்தலோடிறங்கல், அழலையாய் வாட்டத்துடன் கைகாலோய்தல், உடம்பெல்லாம் நெருங்கிய பெருஞ்சொறி யென்னு மிக்குணங்களை யுடையது.
கரப்பிரசாரம்-பரதவுறுப்பு ளொன்று.
கரப்பு-ஒளிப்பு, களவு, மத்து, மீன்கூடு.
கரப்புக்குடில்-சிறுகுடில்.
கரப்பொறி - குடிலைத்தண்டேற்றி வைத்தல், குரங்குபிடிக்கும் ஓர்பொறி.
கரமஞ்சரி-நாயுருவி.
கரமார்த்திகை-திராட்சைக்கொடி.
கரமாலம்-புகை.
கரமுகவம்பி-யானைமுகவோடம்.
கரமுகன்-விநாயகன்.
கரமுத்தம்-ஓர்பாணம்.
கரமை-உல்லாப்பியம்.

கரம் - † அழிவுள்ளது, எழுத்தின்சாரியை (உ-ம்) அகரம், ஓலைக்குவியல், கழுதை, கிரணம், குடியிறை, கை, நஞ்சு, முழம், யானைத்துதிக்கை.
கரம்பம்-பொடிமா.
† கரம்பனூர் - நூற்றெட்டுத் திருப்பதிகளு ளொன்று; இது உத்தியோக விமானமமைந்ததும் சோழநாட்டிலுள்ளதுமாம். இதற்கு உத்தமர் கோயிலென மறுபெயரு முண்டு.
† கரம்பி-சகுனிமகன், குந்தி.
கரம்பு-பாழ்நிலம்.
கரம்பை-ஓர்பூடு, களிமண், சிறுகளா, பாழ்நிலம்.
கரயந்திரம்-வில்லின் கைப்பிடி.
கரருகம்-நகக்கண், நகம்.
கரவடம்-களவு, வஞ்சகம்.
கரவடர் } திருடர், வஞ்சகர்.
கரவர் }
கரவாகம்-காக்கை.
கரவாதி-சுரிகைக்கத்தி.
† கரவாபிகை-சிறுவாள்.
கரவாலம்-நகம்.
கரவாளம் } கைவாள், பட்டா.
கரவாள் }
கரவிந்தை-களாச்செடி.
கரவீரம்-அலரிச்செடி.
† கரவீரேசுவரம்-சிவத்தலங்களாயிரத் தெட்டனு ளொன்று.
† கரவீரேசுவரர்-திருக்கரவீரத்திற் கோயில்கொண்டிருக்குஞ் சுவாமி.
கரவு-உலோபம், ஒளித்தல், களவு, வஞ்சகம்.
கரவுவெளிப்படுமணி-ஒருவரது மறைத்தசெய்கையைத் தன்செய்கையால் வெளிப்படுத்தல் (உ-ம்) கடிமனைக்குக் காலைாருகாவலற்குத் துஞ்சும்படிவிரித்தான் ஓரணங்குபாய்.
கரவை-கம்மாளர் கருவியிலொன்று.
கரவோர்-கரவர்.
களம்-காஞ்சிரமம், நஞ்சு.
கரளை-வளர்தலின்மை.
கரன்-† அழிவுடையோன், ஓரரக்கன்.
கரா-† அழியாதது, ஆண்முதலை, முதலை.
கராகண்டிதம்-சரியாய்ப் பேசுகை, தெளிவு.
† கராகரி-தேவதாரமரம்.
கராக்கி-விலைக்குறைவு.

† கராக்ஷேபகவாதம்-ஓர்வகை வாதநோய்; அது அதிக வாதவஸ்துக்களை மிகவும் புசித்தலினாற் பிறந்து சர்வாங்கத்திலும் வியாபித்துப் பின்னர்க் கைகளையனுசரிப்பது. அப்போது நிரேதுவாகவே கைகளுக்கு சுழற்ற லுண்டாவதோடு அசைக்கவும் நீட்டவுமுடக்கவுங் கூடாமலிருக்கும்.

கராசலம்-யானை. *



கராசனம்-புலி.

கராடம்-மருக்காரை.

கராமம்-வெண்கடம்பு.

கராமுத்து - முதலையிற் பிறந்த வெண்ணிற முத்து.

கராம்-ஆண்முதலை, முதலை.

கராம்பு-ஓர்சரக்கு.

கராலகம்-கருந்துளசி.

கராளகேசரி-மூர்க்கமான சிங்கம்.

கராளம்-நீக்குணம்.

கராளவதனம்-பயங்கரமுகம்.

கராளி-தீக்குணம்.

கராளை-வளராதவன்.

கரி - இருந்தை, கரியென்னேவல், கருமை, சாட்சி, திருட்டாந்தம், நஞ்சு, யானை, வயிரம்.

கரிகரம்-கலவி விளையாட்டிஞென்று.

கரிகறுத்தல்-கவலையான் முகங்கருகல், மிகக் கறுத்தல்.

கரிகன்னி-வெருகு.

கரிகாடு-கரிந்தகாடு, யானைதிரியுங்காடு.

கரிகாலன்-ஓர்சோழன்.

† கரிகாற்சோழன் - காவிரிப்பூம்பட்டினத்தில் இளஞ்சேட் சென்னியனென்னுஞ்சோழனுக்குப் புத்திரனாக வவதரித்து உத்தர தேசத்திற் படைகொண்டு அநேக நாடுகளைத் தன்வசப்படுத்திப் பகைஞரை யடக்கி மனுநெறி வழாது செங்கோல் செலுத்தினவனும் கடியலூர் உருத்திரங் கண்ணனாரென்னும் புலவர் பட்டினப்பாலையென்னும் பிரபந்தத்திற் புகழ்ந்து பாடப்பட்டவனும் அப்புலவர்க்கு அப்பிரபந்தத்திற்காகப் பதினாறிலக்கம் பொன் பரிசளித்தவனுமாகிய சோழன்; சாரமாமுனிவரிட்ட சாபத்தால் உறையூர் மண்மாரியாலழிய அதில் அரசு செய்திருந்த பராந்தகசோழனு மனைவியும் அம்மண் மாரிக்குத் தப்பியோடிக் காவிரிநதியைக் கடந்து செல்லும் போது பராந்தகன் குதிரையினின்றுந் தவறிக் காவிரியில் வீழ்ந்திறக்க அவன் மனைவி அக்கரைப்பட்டு ஒருவனத்தை யடைந்தாள். பராந்தகனிறக்கும்போது கருப்பத்திலிருந்த இக்கரிகாற் சோழன் சிலநாளிற் பிரமமாநதி முனிவராச்சிரமத்திற் பிறந்து அம்முனிவராற் சகல கலைகளுமோதி யுணர்ந்து வருங்காலத்தில் அரசிழந்த சோழநாட்டிற்கோ ரரசனைத் தேடுமாறு விடப்பட்ட யானையானது சென்று அச்சிறுவனைத் தூக்க வெத்தனித்தும் போதுமான வலியின்மையாற் றிகைத்து நிற்க அப்போது அப்பிரமமாநதிமுனிவர் அப்புத்திரன் காலில் ஓர்கரிக்கட்டியால் வரைசெய்துவிட அவ்வளவில் அப்புத்திரனை யானை தூக்கிச் சென்று முடிசூட்டுவித்தது. இக்காரணத்தாலேயே இவன் கரிகாற்சோழனெனப் பெயர் பெற்றான். எனவே இப்பெயருடையார் இருவரென்பதாயிற்று.

கரிக்கண்டு-கரிசலாங்கண்ணி.

கரிக்காந்தல்-தூட்கி.

கரிக்குடர்-மடக்குடர், மலக்குடர்.

கரிக்குருவி-ஓர்புள், கஞ்சனம். [கை.

கரிக்கை - கரிசலாங்கண்ணி, யானைத்துதிக்

கரிக்கொடி-மூவகைக் கொடியிஞென்று.

கரிக்கொள்ளி-குறைக்கொள்ளி.

கரிக்கோடிடுதல் - சிறுவர்களுக்கு முகவாய்க்கட்டை முதலிய இடங்களில் மயிர் புறப்படுதல்.

கரிக்கோலம்-அழிஞ்சில்.

கரிசங்கு-தென்னோலைமூடு.

கரிசம்-பஞ்சம்.

கரிசலாங்கண்ணி-கையாந்தகரை.

கரிசலை-பொற்றலைக்கையாந்தகரை.

கரிசல்-கருமை, முதிர்ந்தவிலை.

கரிசற்காடு-அடர்ந்தகாடு, கருமண்ணிலம்.

கரிசனம்-அன்பு, இழுத்தல், உழுதல், பரிவு, பொற்றலைக் கையாந்தகரை, யானைக் கோடு.

கரிசனை-அன்பு, பரிவு.

கரிசன்னி-வெண்காக்கணம்.

கரிசாபகம்-யானைக்கன்று.

கரிசாலை-கையாந்தகரை.

கரிசி-இருநூறுபறைகொண்ட அளவு, குறைவு, குற்றம், தவறு.

கரிசை-கரசை.
கரிச்சாங்கிழங்கு-ஓர்பூடு.
கரிச்சால்-கரிசலாங்கண்ணி.
கரிச்சான்-கரிச்சால், கருங்குருவி.
† கரிஷ்டம்-மிகவும் பளுவானது.
கரிணி-பெண்யானை, யானை.
கரிணிகம்-ஓர்காதணி.
கரிதம்-அச்சம்.
கரிதல் - கருகுதல், காந்தல், தீதல், பெருங் [கோபம்.
கரிதன்-அச்சமுள்ளோன்.
கரிதாரகம்-சிங்கம்.
கரிதிப்பிலி-ஆனைத்திப்பிலி.
கரித்தல்-உறைத்தல், எரிதல், கார்த்தல்.
கரிநாள்-கருநாள்.
கரிபதம்-ஓர்வகைப்புணர்ச்சி.
கரிபத்திரம்-தாளிசபத்திரி.
கரிபந்தம்-யானைகட்டுந்தறி.
† கரிபிப்பிலி-யானைத்திப்பிலி.
கரிப்பான்-கரிசலாங்கண்ணி.
கரிப்பு-அச்சம், கரித்தல்.
கரிப்புறத்திணை-புறத்திணையிலொன்று; அது சான்றோர் சொற்றவற்றைச் சாட்சியாகக் காட்டால்.
கரிப்பூசுதல்-வசைவைத்தல்.
† கரிப்போதகம்-யானைக்குட்டி.
கரிமரகாய்-கறுப்பு முறுப்புக்கேடுமானது.
கரிமருந்து-வெடிமருந்து.
கரிமா - அட்டசித்தியிலொன்று; அஃது இருப்புமலையினுங் கனத்தல்.
கரிமாசலம்-சிங்கம்.
கரிமுகன்-விநாயகன்.
கரிமுண்டம்-அரக்கறுவல், கோரரூபி, மிகக்கறுத்தவன்.
கரிமுரடு-அவிந்தகொள்ளிக்கட்டை.
கரியது-கருநிறமுள்ளது.
கரியபிலை-கருவேப்பிலை.
கரியபோளம் - கறுப்புக்குங்குலியம், நறும்பிசின், மூஷாம்பரம்.
கரியமணி-கண்மணி, கரியபாசி.
கரியமால்-காய்ச்சற்பாஷாணம், விட்டுணு.
கரியலாங்கண்ணி-கரிசலாங்கண்ணி.
கரியல்-கருகல், வளராமரம்.
கரியல்வடலி-பனங்கருக்கு.
கரியவன்-இந்திரன், கடவுள், கண்ணன், கள்வன், கறுப்பன், கறுவல், சனி, சிவன், நமன், விட்டுணு.

கரியான்-கரியவன்.
கரில்-கார்ப்பு, குற்றம், கொடுமை.
† கரில்லகம்-பாகல்.
கரிவங்கம்-காரயம்.
கரிவரி-வெள்ளைப்பாஷாணம்.
கரிவாகனன்-இந்திரன், ஐயன்.
கரிவு-தீவு.
† கரீசுவரம்-சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.
† கரீஷம்-உலர்ந்தசாணம்.
† கரீநதிரேசுவரம்-சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.
கரீரம் - அகத்தி, கருவேல், குடம், கும்பவிராசி, மிடா, மூங்கிற்போத்து, யானை, யானைப்பல்லடி.

கரீரி
கரீரிகை } யானைப்பல்லடி.
கரீரை

கரு - அட்டகருமக்கரு, ஆயுதத்தின்பல், ஓரூர், கம்மக்கரு, கருப்பம், கருப்பொருள், காரணம், நடு, நிறம், பிள்ளை, பெருமை, முட்டை, மேடு, மேன்மை, யோசனை.
கருகருத்தல்-அரிகண்டப்படுத்தல்.
கருகல்-கருகினது, கருகுதல், தீதல், பொருண்மறைவு, மாலைநேரம்.
கருகுதல்-கரிதல், கறுத்தல், தீதல், பொருண்மறைதல்.
கருகுமாலை-மசண்டை, மாலைநேரம்.
கருகூலம்-கருப்புக்கட்டி, புகையல், பொக்கசம்.
கருக்கட்டுதல்-மழைக்குணமாயிருத்தல், யோசனை பண்ணல், வார்ப்புவேலைக்குக் கருப்பிடித்தல்.
கருக்கரிவாள்-கூன்வாள்.
கருக்கரைதல்-கருப்பமழிதல்.
கருக்கல் - இருள், கருகினது, கருப்பாக்கல், காய்ந்தபயிர், சப்பட்டை, மப்பு, மனதை நோவச்செய்தல், மாலைநேரம்.
கருக்கழிய-கூர்மழுங்க.
கருக்காக்குதல்-கூராக்குதல்.
கருக்காய்-இளங்காய், பதர்.
கருக்கானவன்-கபடன்.

கருக்கிடல்
கருக்கிடுதல் } கூராக்குதல்.

கருக்கிடை-யோசனை.

கருக்கு-இரேகித்தசித்திரம், ஈர்வாட்பல், கருகல், கருக்கென்னேவல், கூர், பனைமட்டை, இலை முதலியவற்றின் கருக்கு.
கருக்குச்சுருட்டு-கபடம்.
கருக்குடி-சவுக்காரம்.
கருக்குதல்-கருகப்பண்ணுதல், திட்டல்.
கருக்குப்பீர்க்கு-ஓர் பீர்க்குக்கொடி.
கருக்குவாய்ச்சி } ஓர்மரம்.
கருக்குவாளி }
கருக்குவேலை-சித்திரவேலை.
கருக்குழி-கருப்பாசயம்.
கருக்கூடு-கருப்பை.
கருக்கூட்டல் } கருத்து விசாரித்தல், சினைத்தல், நியாயந்தேடுதல்,
கருக்கூட்டுதல் } மழைக்குணங் கொள்ளுதல், யோசனை செய்யல்.
கருக்கொள்ளுதல்-கருப்பற்றுதல்.
கருங்கடல்வண்ணன்-ஐயன், விண்டு.
கருங்கண்ணி-ஓர்மீன்.
கருங்கந்து-அகக்கந்தின் புறக்கந்து.
கருங்கரப்பன்-கருங்கிரந்தி.
† கருங்கரப்பான்-ஓர்வகைக்கரப்பான் நோய்; அது சர்வாங்கத்திலும் பரபரப்பான ஊரல், கருநிறத்தோடு சாரையின்றோலையொத்த சொறி, அதிற் சிவந்த சலங் கசிதல், கண்டத்தில் விகூக்கடி ரோகம்போல் வெடித்துச் சலம் வடிதல், விகாரரூபம், தாதுநஷ்டமென்னு மிக்குணங்களை யுண்டாக்குவது.
கருங்கல்-ஓர்சாதிக்கல், சிக்கிமுக்கி.
கருங்கழல்-வீரக்கழல்.
கருங்கற்றலை-ஓர்மீன்.
கருங்காக்கணம்-ஓர்காக்கணங்கொடி.
கருங்காய்-செங்காய்.
கருங்காலி-ஓர்மரம்.
கருங்காவி-கருங்குவளை.
† கருங்கிரந்தி-ஓர்வகைக்கிரந்திநோய்; அது சர்வாங்கமல்லது முழங்கால் முழங்கைகளிற் கறுத்தல், வெளிச்சுரம், முலையுண்ணுமை யல்லது வலது முலையுண்ணுமை, நாவுவறளல், உடலிலாவது தோளிலாவது சுடுகை, மலர விழித்து விழித்துப் பார்த்தல், மேன்மூச்சு, மாறுகுணம், அலறல், இருமல், குரல்கம்மல், வயிற்றில் வேதனையென்னு மிக்குணங்களை யுண்டாக்குவது.
கருங்கிளி-ஓர்கிளி.

கருங்குங்கிலியம்-ஓர்மருந்து.
கருங்குதிரையாளி-வயிரவன்.
கருங்குத்தம்-கண்ணோயிலொன்று.
† கருங்குமுதம்-ஓர்வகைநோய்; அது கருவிழியிற் கருங்குவளைப் பூவைப்போல் விரணத்தை யுண்டாக்கிப் பார்வையிலிருள் கம்மியதைப்போலச் செய்வது.
கருங்குரங்கு-கருநிறமந்தி.
கருங்குருவி-ஓர்பறவை.
கருங்குவளை-நீலோற்பலம்.
கருங்குறுவை-ஓர்நெல்.
கருங்குன்றி-ஓர்குன்றி.
கருங்கேசம்-கருமயிர், வெண்கலம்.
கருங்கை-அரியவேலை.
கருங்கொடி-ஓர்பூடு.
கருங்கொட்டி-ஓர்கொட்டி.
கருங்கொண்டல்-தென்கீழ்க்காற்று.
கருங்கொல்-இரும்பு.
கருங்கொல்லர்-இரும்புவேலை செய்வோர்.
கருங்கொள்-ஓர்கொள்.
கருங்கோழி-ஓர்கோழி.
கருங்கோள்-இராகு. *



கருசம் - தேயமைம்பத்தாறி லொன்று.
கருச்சிதம்-முழக்கம், வீராவேசம்.
கருச்சித்தல்-கர்ச்சித்தல்.
கருஞ்சனம்-முருங்கை.
கருஞ்சாதி-கீழ்மக்கள்.
கருஞ்சாந்து-சேறு.
கருஞ்சாரை-ஓர்பாம்பு.
கருஞ்சார்-அரைப்பூட்டு.
கருஞ்சிலை-கருங்கல்.
கருஞ்சீரகம்-ஓர்சரக்கு.
கருஞ்சுக்கான்-ஓர்கல்.
† கருஞ்சுக்கிரன்-ஓர்வகைக் கண்ணோய்; அது விழியைச் சுற்றி யுழுந்துபோல் துவாரங்களை யுண்டாக்குவது.
கருஞ்சுரை-ஓர்சுரை.
கருஞ்சூரை-ஓர்முட்செடி, செங்கத்தாரி.
கருஞ்செம்பை-ஓர்செடி.
† கருஞ்சேரா-ஓர்வகைப்பூச்சி; அது கடித்தால் தேகத்திற் கருமையான தடிப்புகளுண்டாகும்.
கருடகேதனன்-விட்டுணு.
கருடக்கல்-ஓர்கல். [ருமருந்து.
கருடக்கொடி-கருடத்துவசம், குறிஞ்சா, ஒ

கருடக்கொடியோன்-விட்டுணு.
கருடக்கொவ்வை-காக்கணம், கொவ்வை.
கருடசாரம்-உப்பு, சிந்துலவணம்.
கருடணம்-அரைத்தல், தேய்த்தல்.
கருடணை-சேர்த்திக்கை.
கருடதிசை-கிழக்கு.
கருடதியானம்-ஓர்மந்திரம்.
கருடத்துவசன்-விட்டுணு.
கருடத்தொண்டை-காக்கணஞ்செடி, கொவ்வை.
† கருடநதி-நூற்றெட்டுத்திருப்பதிகளுளொன்றாகிய திருவயிந்திரபுரத்திலுள்ளவோர் புண்ணிய தீர்த்தம்.
கருடபச்சை-ஓர்மருந்துக்கல், மரகதம்; அது சிவனிந்திரியத்தைக் கருடன் கவ்விக் கடலில்விட வதனாற்பிறந்தது.
† கருடபஞ்சமி-ஆவணிச் சுக்கில பக்கத்துப் பஞ்சமி; இது சுமங்கலிகட் குரியவிரத தினங்களு ளொன்று.
கருடபஞ்சாக்கரம்-ஓர்மந்திரம்.
கருடபாஷாணம்-ஓர்கல்.
கருடப்பார்வை - இராஜபார்வை, மாறுபார்வை, விடந்தீர்க்கும் பார்வையினொன்று.
கருடர்-பதினெண்கணத்தொருவர்.
கருடல்-விரும்பல்.
கருடவாகனன்-விட்டுணு.
கருடவித்தை-ஓர்வித்தை.
† கருடவிமானம்-நூற்றெட்டுத் திருப்பதிகளுளொன்றாகிய திருவழுந்தூரிலுள்ள விமானம்.
கருடற்கண்ணன்-புதன்.
கருடன்-செம்பருந்து, விட்டுணுவாகனம்.
கருடன்கிழங்கு-ஓர்மருந்துச்சரக்கு.
கருடன்தாய்-விநதை.
கருடாஞ்சனன்-கருடபச்சைக்கல், விஷந்தீர்க்கக் கண்ணிலிடுமருந்து.
† கருடாருடன்-விட்டுணு.
கருடி-சிலம்பம், சூழ்தல், படைவழிதல்.
கருடித்தல் / கருஷித்தல் } இழுத்துக்கொள்ளுதல்.
கருடுதல்-விரும்புதல்.
† கருடேசுவரம்-சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.
கருணமல்லி-முல்லை.
கருணம்-எலுமிச்சமரம்.
கருணன்-கன்னன்.
கருணு-ஓர்வாச்சியம்.
கருணுகடாட்சம்-கிருபைப் பார்வை, தயவு.
† கருணுகரப்பெருமாள்-நூற்றெட்டுத் திருப்பதிகளு ளொன்றாகிய காரகத்திற்கோயில் கொண்ட விட்டுணு.
கருணுகரம்-கருணைக்கிருப்பிடம்.
கருணுகரன்-கிருபாமூர்த்தி.
கருணுக்கிரகன்-கிருபையில்லான்.
கருணுநிதி-கடவுள், காருண்ணியன்.
கருணுபரன்-தயையுள்ளவன்.
கருணுப்பள்ளி-திருவரங்கூரில் ஓர்நகரம்.
கருணுமூர்த்தி-கடவுள், கிருபாரூபி.
கருணுலயம்-கருணுகரம்.
கருணுலயன்-கடவுள்.
கருணி-குகை, பிடியன்யானை, வெற்பு.
† கருணிகாரவனம்-ஓர்வனம்; இதுமேருவுக்குச் சமீபத்திலுள்ளது.
கருணிகை - † ஆனகன்பாரி, † ஓரப்சரசு, பூவினிற் கொட்டை.
கருணிதன்-கிருபையுடையோன்.
கருணீகன்-கணக்கன்.
† கருணேசுவரம்-சிவத்தலங்களாயிரத்தெட்டனுளொன்று.
கருணை-ஓர்செடி, கிருபை; இஃது சுபாவருணமொன்பதினொன்று, பட்சம், பெருங்கிழங்கு, பொரிக்கறி.
† கருணைநாயகி-திருமாற்பேற்றிற் கோயில் கொண்டிருக்குந் தேவியார்.
கருணோதயன்-கடவுள்.
கருதலர்-பகைவர்.
கருதலனுமானம் - ஓரளவை; அஃது உரையால் அறிவினளவை யறிதல்.
கருதல்-எண்ணல், சிந்தித்தல், நிதானித்தல், நினைத்தல், மதித்தல், விரும்பல்.
கருதார்-கருதலர்.
கருதுதல்-எண்ணுதல், சிந்தித்தல், நிதானித்தல், நினைத்தல், மதித்தல், விரும்பல்.
கருத்தங்கல்-கருப்பந்தங்கல்.
கருத்தபம்-கழுதை.
கருத்தமம்-சேறு, பாவம், மாமிசம்.
கருத்தமன்-வருணன் றந்தை.
கருத்தவ்வியம்-செய்யத்தக்கது, தத்துவம்.
கருத்தனுகுபெயர்-கருத்தாவாகு பெயர்.
கருத்தன்-அரன், அருகன், கடவுள், நடப்பிப்போன்.
கருத்தா-அருகன், கடவுள், சிவன், செய்பவ[ன்.

கருத்தாக்காரகம்-வினைமுதற் பொருளைக்காட்டு முருபுடைப்பெயர்.
கருத்தாவாகுபெயர்-கருத்தாவின் பெயரைக் காரியத்திற்கு வழங்கல் (உ-ம்) திருவள்ளுவர்.
கருத்தாளி-ஓர்மரம், குறிப்பறிவான், விவேகி.
† கருத்திருகாரகம்-எழுவாய்.
கருத்து-அபிப்பிராயம், ஆழமானபயன், எண்ணம், கவனம், குறிப்பு, சித்தம், சிந்தனை, சொற்பொருள், தாற்பரியம், நினைப்பு, பலன், விருப்பு, விவேகம்.
கருத்துக்கொள்ளல்-மனம் வைத்தல்.
கருத்துடையடைகோளியணி - ஓரலங்காரம்; அஃது அபிப்பிராயத்துக் குரிய விசேடணத்தைச் சொல்லுதல்.
கருத்துடையடையணி - அபிப்பிராயத்தோடு கூடிய விசேடணத்தைச் சொல்லுதல்.
கருத்துப்பொருள்-மனக்காட்சிப்பொருள்.
கருத்துரை-செய்யுட்கருத்துரைக்கு முரை.
கருத்தொட்டுதல்-யோசித்தல்.
கருநடம்-கன்னடதேயம், கன்னடபாடை.
கருநந்து-நத்தை.
கருநாகம்-இராகு, ஓர்மரம், கரும்பாம்பு.
கருநாசம்-சித்திரமூலம்
கருநாடகம்-ஓர்தேசம்,கன்னடதேசத்தாரின் விசேடம், நாகரிகம்.
கருநாடகவித்தை-நாகரிகக்கல்வி.
கருநாபிக்கிழங்கு-ஓர்கிழங்கு.
கருநாரை-ஓர்கொக்கு.
கருநாவி-கருப்புநாவி.
கருநாள்-ஆகாதநாள்.
கருநிமிளை-நீலாஞ்சனம்.
கருநிலம்-நீரின் மலையின்வனத்திற்பயன்படாமிகுநிலம்.
கருநூல்-ஓர்மாந்திரிகநூல்.
கருநெய்தல்-கருங்குவளை.
கருநெய்தனிறமணி-சாறுரங்கப்பதுமராகம்.
கருநெல்லி-ஓர்நெல்லி.
கருநெறி-தீ.
கருநொச்சி-ஓர்நொச்சி, சுரோணிதநீர்.
கருந்தகரை-ஓர் தகரை.
† கருந்தடங்கண்ணி-நூற்றெட்டுத் திருப்பதிகளுளொன்றாகிய தொலைவில்லி மங்கலத்திற் கோயில் கொண்ட விலக்குமி.
கருந்தனம்-செல்வம், பொன்.
கருந்தாது-இரும்பு.
கருந்தாரை-காரொளி.
கருந்திடர்-மேடு.
கருந்தினை-ஓர்தினை.
கருந்துகிலோன் பலபத்திரன்.
கருந்துவரை-ஓர்துவரை.
கருந்துளசி-ஓர்துளசி.
கருந்தோளி-அவுரி.
† கருப்பகாசம் - ஓர்வகைக்காசநோய்; அது கருவிழியிற் சுத்த கருநிறத்தைக்காண்பிப்பது.
கருப்பகோசம்-கருப்பப்பை.
கருப்பகோளகை-கருப்பாசயப்பை.
கருப்பக்கிரகணம்-கருப்பந்தரித்தல்.
† கருப்பக்கிரகணி - ஓர்வகைக் கிரகணிரோகம்; அது பேதி, கடுப்பு, கைகால் வற்றுதலோடோய்தல், கண்ணில் மஞ்சணிறம், பலவிதக்கழிச்சல், அதிகதாகம், சாப்பிட்டால் வாந்தியாதலென்னு மிக்குணங்களையுண்டாக்குவது.
கருப்பக்கிரகம்-மூலஸ்தானம்.
கருப்பங்கொள்ளுதல்-கருப்பந்தரித்தல்.
† கருப்பசர்ப்பவிஷம் - கருப்பமுற்ற பாம்புகள் கடிப்பதனாலுண்டாகும் விஷம்; அது சிரசு, உதடு, வயிறு, தொடையாகிய இடங்களினோதல், நாக் கறுத்தல், உண்ணாக்கு வளருத லென்னு மிக்குணங்களை யுண்டாக்குவது.
† கருப்பசன்னி-பெண்களுக்குப் பிரசவ காலங்களிலுண்டாகும் ஓர்வகைச் சன்னி நோய்.
† கருப்பசிலேட்டுமம்-கருப்பத்திற் கிடையூறுயுண்டாகு மோர்வகை நோய்.
† கருப்பசூலை - ஓர்வகைச்சூலைநோய்; அது இடுமருந்து, வஞ்சனை, சூனியம், பெருங்காயச்சூடு, பிரசவித்த காலத்திற் றங்கிய அழுக்காகிய இவைகளினாற் பிறந்து கீழ்வயிற்றி விரத்த முறைந்து கருப்பத்தைப் போல் திரண்டு புரண்டுகொண்டு அடிவயிற்றி லதிகச்சூலையை யுண்டாக்குவது.
கருப்பஞ்சாறு-கரும்பிரசம்.
கருப்பஞ்சாற்றுக்கடல்-சத்தசமுத்திரத்தொன்று.
கருப்படம்-கந்தைப்புடவை.
கருப்பட்டி-கற்கண்டு, பனங்கட்டி.
கருப்பதாரணம்-கருப்பந்தரித்தல்.
கருப்பநாடி-கொப்பூழ்க்கொடி.

கருப்பநாள்-பிறந்தநாளுக்கு ஒன்பதாநாள்.
கருப்பநீர்-கருப்பஞ்சாறு, பதநீர், பனை முதலியவற்றினீர்.
கருப்பபாதகம்-செம்முருங்கை.
கருப்பபாதனம்-கருப்பம்விழுதல்.
கருப்பப்பரிசம்-கருப்பந்தரித்தல்.
கருப்பப்பை-கருப்பகோளகை.
கருப்பமழிதல்-கருக்கரைதல்.
கருப்பம்-அரண்மனை, உபநிடத முப்பத்திரண்டினொன்று, உள், சினை.
கருப்பம்பாகு-சருக்கரை.
கருப்பரம்-அத்தி, இருப்புப்பாண்டம், தலையோடு.
கருப்பவதி-கருப்பந்தரித்தவள்.
கருப்பவாதை-கருப்பவேதனை.
கருப்பவாயு-ஓர்வாயு, பிரசூதவாயு.
கருப்பவேதை-கருப்பவேதனை.
கருப்பற்று-கருப்பந்தரிப்பு.
கருப்பாகாரம்-கெற்பக்கிரகம்.
கருப்பாசயப்பை-கருப்பப்பை.
கருப்பாசயம்-கருவிருக்குமிடம்.
கருப்பாதானம்-ஓர்சடங்கு.
கருப்பிடித்தல்-யோசனை மட்டுக்கட்டுதல்.
கருப்பிணி-கருப்பஸ்த்ரீ.
கருப்பிணியவேட்சணம்-பிரசூதிவைத்தியம்.
கருப்பு-அரிது, குறவிலை.
கருப்புக்கட்டி-கற்கண்டு, பனங்கட்டி, வெல்லக்கட்டி.
கருப்புப்பு-கிருஷ்ணலவணம்.
கருப்புரம்-ஓர்நெல், நீர், பாவம், பொன்.
கருப்புவில்-மதன்வில்.
கருப்புவில்லி-காமன்.
கருப்பூரசலாசத்து-ஓர்மருந்து.
† கருப்பூரசுந்தரன்-மதுரையிலமர்ந்தசிவன்.
கருப்பூரதீபம்-கருப்பூரவிளக்கு.
கருப்பூரத்தயிலம்-ஓர்மருந்து.
கருப்பூரத்துளசி-ஓர் துளசி.
கருப்பூரநீர்-ஓர் மருந்து.
கருப்பூரப்புல்-ஓர்வாசனைப்புல்.
கருப்பூரமரம்-ஓர் மரம்.
கருப்பூரம் - சூடன், பஞ்சவாசத் தொன்று, பொன், பொன்னரிதாரம்.
கருப்பூரவல்லி } ஓர்செடி.
கருப்பூரவள்ளி } ஓர்செடி.
கருப்பூரவில்வம்-ஓர்வில்வம்.
கருப்பூரவெற்றிலை-ஓர்வெற்றிலை.
கருப்பூர்-ஓரூர்.
கருப்பூர்வழக்கு-அழிவழக்கு.
கருப்பெட்டி-கருப்பை.
கருப்பை - † உட்கொண்டது, கருப்பாசயப்பை, கரும்பனங்காய்ப்பனை, காவெலி.
கருப்பொருள் - அவ்வந் நிலத்திலுற்பத்திப் பொருள்; அஃது-உணா-ஊர்-குடி-தலைவர்-தெய்வம்-தொழில்-நீர் - பண்-பறை-புள் - மரம்-மலர்-யாழ்-விலங்கு என்பன.
கருமகாரன்-நமன், வேலைக்காரன்.
கருமகர்த்தா-கருமஞ்செய்பவன், காரியகர்த்தர்.
கருமகள்-காக்கை.
கருமகாண்டம் - கன்மநிவிர்த்தி முதலியவற்றைச் சொல்லும் நூல்.
கருமகாண்டிகர்-மூகாண்டைப் பகுதியி லொழுகுவர்.
கருமகாரன்-கம்மாளன், வேலையாள்.
கருமகீலகன்-வண்ணான்.
கருமக்கத்தா - கிரியைநடத்துவோன், செய்வோன்.
கருமக்கழிபலம் - பாவத்தைக்கழிக்கும் புண்ணியம்.
கருமக்காரகம்-வினையைப் பொருளிற் புலப்படுத்து முருபுடைப்பெயர்.
கருமக்கியானம்-கரும அறிவு.
கருமங்கட்டுப்படல்-பாவஞ்செய்தல், வினையொடு நிற்றல்.
கருமசண்டாளன்-துரோகி.
கருமசம்-அரசமரம், கலியுகம், கனகம், சந்து, தீவினை.
கருமசாங்கரியம்-துக்கம்.
கருமசுத்தி-கிரியையின் குற்றந்தீர்ப்பு, பாவப் பிராயச்சித்தம்.
கருமஞ்சரி-நாயுருவி.
கருமணி-கண்மணி, நீலமணி.
கருமத்தலைவர்-வருங்காரியஞ்சொல்வோர்.
கருமத்தலைவன்-அரசர்க்குத் துணைவன், கருமாதிகாரி.
கருமத்துரோகம்-வினைப்பயன்.
கருமநிட்டன்-பிராமணன்.
கருமநிவிர்த்தி-பாவந்தீர்ப்பு.
கருமபந்தம்-செய்வினைத்தொடர்.
கருமபந்தனம்-பழவினைத்தொடர்பு.
கருமபாதை-வேதநூற்பொருளிலொன்று.
கருமபாவம்-கிரியாபாவம்.

கருமபூமி - இருவினை யியற்றற்குரியவுலகம், சுடுகாடு.

கருமபூமிக்குரிமை-உழவு, சிற்பம், தொழில், வரைவு, வாணிபம், வித்தை என ஆறு விதம்.

கருமப்பழி-துரோகம்.

கருமப்பிறப்பு-பாவச்சென்மம்.

கருமமுடித்தல்-செய்தொழில் முடித்தல், நியமமிட்டை முடித்தல்.

கருமமூலம்-தருப்பை.

கருமம் - இயற்கைச்சொல், உட்டணம், கடமை, காரியம், கிரியை, செயப்படு பொருள், செய்கை, முன்வினை, வெப்பம், வேனிற்காலம்.

கருமயிர்-கரடி.

கருமயுகம்- கலியுகம்.

கருமர்-கருமார்.

கருமலை-இரும்புச்சுரங்கமலை.

கருமவிபாகம்-ஊழ்வினைப்பயன்.

கருமவியாதி-மருந்தினாலாறாத நோய்.

கருமவிருத்தி-சுத்தநடக்கை.

கருமவுவமம்-செயலுவமம்.

கருமவேதனை-மிக்கவருத்தம்.

கருமா-பன்றி, யானை.

கருமாதி-அந்தியேட்டிமுதலிய சடங்கு.

கருமாதிகாரம்-கருமங்கள் செய்து முடிக்குமதிகாரம், கிரியைக்கதிகாரம்.

கருமாதிகாரன்-அரசர்க்குத் துணைவரி லொருவன், காரியத்தலைவன், கிருத்தகாரன்.

கருமாதிக்காரர்-கருமத்தி லாதிக்கம் பெற்றோர், காரியத்தலைவர்.

கருமாதிசெய்தல்-ஈமக்கடன் முதலிய செய்தல்.

கருமாத்துமா-கன்மஞ்செய்தவன்.

கருமானுட்டானம்-நியமநிட்டை.

கருமாந்தம்-கருமாந்தரம், கார்காலம்.

கருமாந்தரம்-கருமாதி, பாவம்.

கருமாந்தியம்-அந்தியேட்டி.

கருமாந்திரம்-கருமாதி, பாவம்.

கருமாயம்-அதிகவிலை, அருமையானது.

கருமாரன்-கொல்லன்.

கருமாரி-ஓர்மரம், பிரசுதவேதனை.

கருமார்-கொல்லர்.

கருமாணம்-சூரியவாணம், கருவித்தை.

கருமானுபவம்-செய்வினைப்போகம்.

கருமான்-கலைமான், கொல்லன், பன்றி.

கருமி-தீவினையுடையோன், நித்திய கருமம் வழுவாது செய்வோன், பாவி, பூசைசெய்பவன்.

கருமிசம்-வினை.

கருமுகில்-நீருண்டமேகம், வைப்புப்பாஷாண முப்பத்திரண்டிலொன்று.

கருமுகில்வண்ணம்-நீமுறுகற்பாஷாணம்.

கருமுகிற்சிலை-காந்தக்கல்.

கருமுகிற்பாஷாணம்-கார்முகிற்பாஷாணம்.

கருமுகை-இருவாட்சி, சிறுசெண்பகம்.

கருமுடித்தல் -அட்டகருமக்கருவுண்டாக்கல், வேலைதக்கருமுடித்தல்.

கருமுதல்-ஓர்மீன்.

கருமூடன்-கீழ்ப்படியாதவன்.

கருமூரல்-ஓர்மீன்.

கருமேகம்-காளமேகம்.

கருமேந்திரியம்-கன்மேந்திரியம்.

கருமை-கறுப்பு, நஞ்சு, பெருமை, வலி, வெள்ளாடு.

† கரும்படுசொன்னாயகி-திருப்புறம்பயத்திற் கோயில் கொண்டிருக்குந் தேவி.

கரும்பனசை-கருவழலைப்பாம்பு.

கரும்பனூர்-ஓரூர்.

† கரும்பனூர்கிழான் - ஓர் வேளாளப் பிரபு; இவன் வேங்கடநாட்டில் விளங்கிய கரும்பனூரான் மகனும் புறத்திணை நன்னாகனாற் பாடப்பட்டவனு மாவன்.

கரும்பனையன்-ஓர்பாம்பு.

† கரும்பன்-ஓர் ஈகையாளன்; இவன் தன் தோட்டத்தி லிருந்த கரும்பை யெல்லா மொருநாளறுத்து வைத்து தின்னுகவென்று யாவரையு மழைத்தபோது சிலர் மறுக்க அவர்க்குக் கூலி கொடுத்தழைத் தருந்தின தொண்டை நாட்டு வேளாளன். கரும்பு தின்னக் கைக்கூலி யென்ற பழமொழி யிவனால் வந்தது.

கரும்பாம்பு-இராகு, கருவழலை.

கரும்பாலை-ஓர்மரம், கரும்பாட்டுஞ் செக்கு.

கரும்பித்தம்-ஓர்நோய், ஓர்பித்தம்.

கரும்பிள்ளை-காக்கை.

கரும்பிறை-கருஞ்சுக்கான்.

கரும்பு-கன்னல், புகர்பூசம்.

கரும்புக்கட்டி-கருப்பங்கட்டி.

கரும்புசம்-வண்டு. *



கரும்புமுத்து-கரும்பிற்பிறக்க மஞ்சணிற முத்து.

கரும்புலி-ஓர்புலி.
கரும்புல்-பனைமரம்.
கரும்புவில்லி-மன்மதன்.
கரும்புளித்தல் - கெட்டுப்போதல், செம்பிற் களிம்பூறுதல்.
கரும்புள்-கரிக்குருவி-காகம், பெண்வண்டு, வண்டு.
கரும்புள்ளிக்கல்-கானகக்கல்.
கரும்புள்ளிதீட்டல்-ஓர்கோலந் தீட்டல்.
கரும்புறம்-பனை.
கரும்புறவு } ஓர்புறவு.
கரும்புரு }
கரும்பூ-நீலோற்பலம்.
கரும்பூமத்தை-கரியவூமத்தை.
கரும்பேன்-புடைவையிற் பற்றுங்கரும்புள்ளி.
கரும்பொன்-இரும்பு.
கருவகம்-கருத்தரிக்குந்தானம்.
கருவங்கம்-காரீயம்.
கருவடம்-தலைமையானவூர், மலையுமாறுஞ் சூழ்ந்தவூர்.
கருவண்டு-கறுத்தவண்டு.
கருவண்ணம்-கறுப்புநிறம்.
கருவதை-சிசுவதை.
கருவம்-அகங்காரம், ஓரெண், சினை.
கருவரி-இருள், கருவிழியின்ரேகை.
† கருவரை-வலிய மலை.
கருவல்-கருப்பானது.
கருவழலை-ஓர்பாம்பு.
† கருவழலைச்சர்ப்பவிஷம்-ஓர்வகை விஷம்; அது சரீரத்திற் காங்கையோடு அதிக வியர்வையும், உள்ளங்கால் உள்ளங்கைகளிற் சிவப்பும், கோழையால் மார்பிலடைப்பும் பிறக்கும்படி செய்வது. அதனு லனந்தம் வேதனை யுண்டாகும்.
கருவழித்தல்-சிசுவதை.
கருவளைச்சுக்கான்-கருஞ்சுக்கான் கல்.
கருவறிதல்-கருத்தறிதல்.
கருவறுத்தல்-நாளுக்குநாட்கவர்தல்.
கருவா-இலவங்கமரம்.
கருவாடு-காய்ந்தமீன்.
கருவாட்டுவாலி - எருத்துவாலன்குருவி, வலியான்.
கருவாப்பட்டை-இலவங்கப்பட்டை.
கருவாமுப்பு-ஒருப்பு.
கருவாலி-ஓர்மரம், ஓர்குருவி.
கருவாழை-ஓர்வாழை.

கருவாளி-கருத்துடையோன்.
கருவானம்-கருமானம்.
கருவி-ஆயுதப்பொது, உபகாரணம், கவசம், காரணம், குதிரைக் கல்லணை, கூட்டம், தொடர்பு, நட்பு, மெய் வாய்முதலியகருவி, மேகம், யாழ், வாச்சியம், வீணை.
கருவிகரணம்-பொறியும் அந்தக்கரணமும்.
கருவிகழலுதல்-பெலன்கெடல்.
கருவிகாண்டம்-வாசிக்கப்படுநூல் புத்தகம்.
கருவிக்காரகம்-கருவிப்பொருளைக் காட்டு முருபுடைப்பெயர்.
கருவிக்குயிலுவர் - தோற்கருவி வாசிப்போர்.
கருவிநூல்-கருவிகாண்டம்.
கருவிப்புட்டில்-படையுறை.
கருவிப்பை-ஆயுதவுறை.
† கருவிமாக்கள்-யாழ்ப்பாணர்.
கருவியாகு பெயர் - கருவியாகுகிய பெயர் (உ-ம்) நாழி.
கருவிரலூகம்-கரியவிரலையுடைய குரங்குபோலிருந்து சேர்ந்தாரைக் கடிக்கும் யந்திரம்.
கருவிலி-ஓர்பாம்பு.
கருவிழி-கண்மணி.
கருவிளங்கனி-மூன்று நிரையசையாய் வருஞ் சீர்க்கு வாய்பாடு.
கருவிளங்காய்-நிரைநிரை நேராய்வருஞ்சீர்க்கு வாய்பாடு.
கருவிளநறுநிழல்-நாலு நிரையசையாய் வருஞ் சீர்க்கு வாய்பாடு.
கருவிளநறும்பூ - நிரை நிரை நிரை நேராய் வருஞ்சீர்க்கு வாய்பாடு.
கருவிளந்தண்ணிழல் - நிரைநிரை நேர் நிரையாய்வருஞ்சீர்க்கு வாய்பாடு.
கருவிளந்தண்பூ-நிரை நிரை நேராய்வருஞ்சீர்க்கு வாய்பாடு.
கருவிளம்-இரண்டு நிரையசையாய் வருஞ்சீர்க்கு வாய்பாடு, ஓர்மரம், காக்கணஞ்செடி.
கருவிளா-ஓர்மரம்.
கருவிளை-காக்கணஞ்செடி.
கருவுயிர்த்தல்-ஈனல்.
கருவுளமைப்பு-சென்மத்நினியமம்.
கருவூமத்தை-ஓர்ஊமத்தை.
கருவூர்-கோயம்புத்தூர் சில்லாவில் ஓரூர், † வஞ்சி; இந்நகர் சேரருக்குரிய இராஜதானி, சேரரை வென்று சோழருமிங்கா சியற்றினர்.
கருவூலம்-பொக்கசம்.

கருவெடுத்தல்-உடம்பெடுத்தல்.
கருவேப்பிலை-கருவேம்பினிலை.
கருவேம்பு-ஓர்மரம்.
கருவேல்-ஓர்மரம்.
கருவை-ஓரூர், வரகுவைக்கோல்.
கருவெளவால்-ஓர்மீன்.
கருளை-கரளை.
கருள்-இருள், கறுப்பு, கல்லாடை.
கருனீகசன்னி-ஓர்சன்னி.
கருனை-பொரிக்கறி.
† கருசன்-வைவசுவத மனுவினுடைய புத்திரரு ளொருவன், இக்ஷுவாகுதம்பி, காருசர் இவன் வமிசத்தவர். இவன் தேசம் கருசம்.
கரேகரம் - குத்துச்சண்டை, முழங்கைமடிப்பு.
† கரேசுவரம் - சிவத்தலங்க ளாயிரத் தெட்டனு ளொன்று.
கரேடம்-நகம்.
கரேணு-பெண்யானை, யானை.
கரை-அருகு, எல்லை, கரையென்னேவல், கானல், முடிவு, வார்த்தை.
கரைகடத்தல்-எல்லைக்குமேற்படல்.
கரைகண்டவன்-மிகத்தேர்ந்தவன்.
கரைகலம்-ஆபரணச்செப்பு.
கரைகன்று-அழிகன்று.
கரைகாணல்-எல்லைகாணுதல்.
கரைகாணப்பேரொளி-கடவுள்.
கரைக்கல்லோலம்-கடற்பாசி.
கரைக்காற்று-கடலோரத்தி லடிக்கும்காற்று.
கரைசிலை-இந்துப்பு.
கரைச்சல்-உருக்கம்.
கரைஞ்சான்-அகில்.
கரைதல்-அழுதல், அழைத்தல், அறப்பழக்குதல், ஆரவாரம், இரங்கல், இளைத்தல், உருவழிதல், ஒலித்தல், சொல்லுதல், பதனழிதல், பேரொலி, வருந்துதல்.
கரைதுறை-துறைமுகம், முடிவு.
கரைத்தல்-உருக்குதல், எழுத்திலா வோசை, கரைக்குதல், சொல்லா வெழுமொலி.
கரைபிடித்தல்-கரையடைதல்.
கரைபுரட்டுதல் } கரைபுரளுதல் } கரைமூடிப்பாய்தல்.
கரைப்படுதல்-கரையேறுதல்.
கரைப்படுத்தல்-கரைக்குக்கிட்டவைத்தல்.
கரைப்பாதை-கரையோரமானவழி.
கரைப்போக்கு - இழிவானது, கரையோரம், கரைவழி, போலிமணி.
கரைப்போர்-கரையிலிருந்து பண்ணுஞ் சண்டை.
கரையடுத்தது-கரையைக்கிட்டினது.
கரையல்-கரைந்தது, கரைந்துபோவது, கணிதல்.
கரையார்-ஓர்சாதி, வலைஞர்.
கரையேறல்-கரையையடைதல், நற்கதியடைதல், வருத்தத்தினின்று நீங்கல், வாழ் வடைதல்.
† கரையேறவிட்டநல்லூர் - ஓர் சிவத்தலம்; இது திருப்பாதிரிப் புலியூருக்குச் சமீபத்திலே கெடிலநதி தீரத்திலுள்ளது. கெடிலம் பெருகி மாணிக்கவாசகரை வழிதடுக்கச் சிவன் சித்தராய் வந்து அவர்க்கு வழி விடுத்ததலமு மிதுவாகும்.
கரையோட்டு-கரைபிடித்தோடல்.
கரைவலை-கரைக்குக் கொண்டுவரும் வலை.
கரைவலைக்காரர்-கரையாரிலோர்பகுதி.
கரைவழி-கரைப்பாதை.
கரைவாடை-வடமேல்காற்று.
கரைவீதம்-கரைக்கேற்றபங்கு.
கரைவு-கரைதல்.
கரோடகம்-துணிப்பெட்டி.
கரோடம்-தலையோடு.
கரோடி-தலையோட்டுப்பொருத்து, முடிமாலை.
கரோடிகை-கழுதைக்குட்டிமாலை, முடிமாலை.
கரோருகம்-நகம்.
† கரோரேசுவரம்-சிவத்தலங்க ளாயிரத் தெட்டனு ளொன்று.
† கர்கடேசுவரம்-சிவத்தலங்க ளாயிரத்தெட்டனு ளொன்று.
கர்க்கடகசிரிங்கி-கடுக்காய்ப்பூ.
கர்க்கடகம்-ஓர்ராசி, நண்டு.
† கர்க்கடேசர் - திருந்து தேவன் குடியிற் கோயில் கொண்டிருக்குஞ் சுவாமி.
† கர்க்கன்-யாதவர்கள் புரோகிதன்; வசுதேவன் இவனை நந்தன் மனைக்கனுப்பிப் பலராம கிருஷ்ணர்களுக்கு நாமகரணாதி சமஸ்காரஞ் செய்வித்தான், ஹஸ்தமன்னியன் என்னும் புமன்னியன் புத்திரன், சினி தந்தை.
கர்ஜூரோகம்-சரீரஊறல், சொறிசிரங்கு, நமட்டுச்சிரங்கு, தினவு.
கர்ச்சிதம்-இடிமுழக்கம், யானைப்பிளிறொலி.
கர்ச்சித்தல்-முழங்கல்.

கர்ச்சூரம்-கழற்கொடி, பேரீந்து.

† கர்ணகண்டு-ஓர்வகைநோய்; அது காதுக்குள் அதிக கபத்தினுல் நமைச்சலை யுண்டாக்குவது.

† கர்ணகிருமி-ஓர்வகை நோய்; அது காதுகளில் திரிதோஷச்செய்கையாற் பிறப்பது. அதனுற் கிருமிகள் சனித்து அவ்விடத்திற் சீழ்,இரத்தம், மாமிசமிவைகளைப்புசித்துக் கொண்டு அதிக ஆரலையும்மிக்க நோவையுமுண்டாக்குவது.

† கர்ணகூசிகை-ஓர்வகைநோய்; அது காதுக்குள் வாயு தங்குங் காலத்திற் பிறப்பது. அதனுல் செவியினதுட் கருவியாகிய குறும்பி முடங்கிக்கொண்டு மிக்க வுபத்திரவமுண்டாம்.

† கர்ணசோபை-ஓர்வகை நோய்; அது காதுளதிகவீக்கத்தைமாத்திர முண்டாக்குவது.

† கர்ணதந்திரிகை-ஓர்வகை நோய்; அது காதுக்குட் பிசினைப்போல் நெகிழ்ச்சியாகவுமிழுத்தா லறுமல் தந்தியைப்போல் நீளுவதாகவு மிருக்கின்ற சீழையுண்டாக்குவது.

† கர்ணநாதம்-ஓர்வகை நோய்; அது காதுகளி லோசையைத் தெரிவிக்கின்ற நரம்புகளில் வாயு சேருங்காலத்திற் பிறப்பது. அதனுற் காரணமில்லாமலே காதுக்குள் நானுவிதச் சத்தங்க ளுண்டாகும்.

† கர்ணபரிபோடகம்-ஓர்வகை நோய்; அது வாயுவினுற் காதுக்கு ளற்பவீக்கத்தையுடைய கொப்பளங்களைப் பிறப்பிப்பது. அது அதிக நாள் அப்படியே யிருக்கும். அப்பால் விருத்தி யடைய ஆரம்பித்தாற் சீக்கிரத்தில் விருத்தி யடையும். அதனுல் அம்மார்க்கத்தில் மிகு சிவப்பும் நோவு முண்டாகும்.

† கர்ணபாலசோஷம்-ஓர்வகை நோய்; அது காதுக்குள் ளிருக்கும் நரம்புகளில் வாயுவு தங்கிச் சஞ்சரிக்கும்போது பிறப்பது. அதனுல் நெற்றி யுலர்ந்து மிகவுஞ் சுட்கத்தை யடையும்.

